தொகுதி-8 எண் 2
Vol. 8 No. 2

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandra Segaran*

*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr. M. Pandi*
*Dr. G. Stephen*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. Seetha Lakshmi*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Krishanan*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr. Vaani Arivalan*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. S. Thangamani*
*Dr. Senthil Prakash*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Vignesh Ananth*
*Dr.M. Arunachalam*
*Dr. S. Bharathi Prakash*

பங்குனி - ஆனி 2051
April - June 2020

ISSN : 2321-984X

# நவீனத் தமிழாய்வு

*(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)*

*Journal of*

# Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*

Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

*Published by*
**RAJA PUBLICATIONS**
No. 10 (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India.
Mobile : 9600535241
Website : www.rajapublications.com

24 பகுதி-5
Part -5

| | | |
|---|---|---|
| 167. ப. கற்பகராமன் | திருமுருகாற்றுப்படை மற்றும் கந்தரலங்காரத்தில் உறவுமுறை ஒப்பீடு | 1093-1096 |
| 168. ஆ. சந்திரசேகரன் | திருமூலரும் மகப்பேறு மருத்துவமும் | 1097-1100 |
| 169. அ. அசோகன் | பண்டைய தமிழரின் நம்பிக்கைகளும் சகுனங்களும் | 1101-1103 |
| 170. பெ. தீபா | பெரியபுராணம் குறிப்பிடும் அனல்வாதம்-புனல்வாதம்-ஓர் ஒப்பீடு | 1104-1106 |
| 171. கு. கருமுருகானந்தராஜன் & மோ. கோமதி | நீர் நிலைகளின் பயன்களும், பாதிப்புகளும் | 1107-1110 |
| 172. ஆ. இன்பவள்ளி | நாட்டுப்புற இலக்கியத்தில் சமுதாயப் பண்பாடுகள் | 1111-1114 |
| 173. கு. ரேவதி | குமாரபாளையம் மாரியம்மன் திருவிழாவும், சமூகப் பண்பாட்டு விழுமியங்களும் | 1115-1117 |
| 174. வா. கவிதா | பெருங்கதையும் தொல்காப்பியமும் உணர்த்தும் எண் வகை மெய்ப்பாடுகள் | 1118-1122 |
| 175. ஆ. கவிதா | திருமந்திரமும் திருக்குறளும் ஓர் ஒப்பீடு | 1123-1126 |
| 176. மு. மெய்வேல் | எட்டுத்தொகை-குறிஞ்சித்திணையில் மகளிர் ஒழுக்கம் | 1127-1135 |
| 177. ஆ. முருகன் | கந்தபுராணம் திருமுருகாற்றுப்படை ஓர் ஒப்பீடு | 1136-1139 |
| 178. க. நித்யா | குறுந்தொகையில் பண்பாட்டுச் சிந்தனைகள் | 1140-1144 |
| 179. இரா. பிரீத்தி | திருப்புகழ், கந்தரநுபூதி, கந்தன் கருணை, முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் - ஓர் ஒப்பாய்வு | 1145-1147 |
| 180. பெ. கு. பிரேமா | பெரியபுராணம் உணர்த்தும் பண்பாடு | 1148-1150 |
| 181. ரா. ரவிச்சந்திரன் | புறநானூற்றில் தமிழர் பண்பாட்டு நிகழ்வுகள் | 1151-1154 |
| 182. செ. ரேவதி | அக்கினிப் பறவைகள் புதினத்தில் பண்பாட்டுக் கூறுகள் | 1155-1158 |
| 183. ரா.ம. ரேவதி | கம்பனில் தொல்காப்பியச் சுவடுகள் | 1159-1161 |
| 184. ச. இந்திரா | தோடர் இன மக்களின் இசையும் ஆட்டக் கலையும் | 1162-1165 |
| 185. ப. செல்வமணி | தமிழர் பண்பாடு | 1166-1169 |
| 186. த. சிவானந்தம் | வேதாத்திரி மகரிஷியின் அறச்சிந்தனைகளும் வள்ளுவரின் அறச்சிந்தனைகளும் - ஒப்பீடு | 1170-1175 |
| 187. செ. தங்கராஜ் | எட்டுத்தொகையும் பண்பாடும் | 1176-1181 |
| 188. இரா. உமாதேவி | பத்துப்பாட்டில் தமிழர் பண்பாடு | 1182-1185 |
| 189. மா. வசந்தகுமாரி | தொல்காப்பியமும் சங்கக் கருத்தாடலும் | 1186-1190 |
| 190. செ. யமுனா | கலைக்கு உடல் ஊனம் ஒரு தடை இல்லை | 1191-1193 |
| 191. ச. லதா | திருக்கோவையார் காட்டும் களவொழுக்கப் பண்பாடு | 1194-1197 |
| 192. சீ. அகல்யா | ஒப்பீட்டு நோக்கில் பொருள்கோள் | 1198-1202 |

Published by : **Raja Publications,** No. 10, Upstair, Ibrahim Nagar, Khajamalai, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Mobile : 9600535241
Printed : **The Printing House,** Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Ph : +91 - 431-2420121

# தமிழர் பண்பாடு

ப. செல்வமணி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),
எளையாம்பாளையம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா

தனிமனிதன் ஒன்றை, நாள்தோறும் அல்லது அடிக்கடிச் சிந்தனையாலோ செயலாலோ கற்பது அல்லது தொடங்குவது அல்லது தொடக்க காலத்தின் தொடர்ச்சி, பழக்கம், தனிமனிதனோ, ஒரு சிலரோ, பலரோ, இனமோ, குழுவோ, நாடோ ஒரு பழக்கத்தை நிலையாகத் தொடர்வது வழக்கம் என்று சொல்லலாம். பொதுவாக மக்கள் தாம் உண்பதற்கு முன் சமைத்த உணவைக் கலந்து காக்கைக்கு உணவாக படைப்பதை பழக்கமாகக் கொண்டிருந்தனர். இந்தப் பண்பு இப்பொழுதும் கடைபிடிக்கப்பட்டு வருகின்றது. விருந்தோம்பல் பண்பு என்பது தமிழர்களுக்கே உரியது எனலாம். சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் பாரி மகளிரை பெண் கேட்டு தூதனுப்புகின்றனர் ஆனால் பாரியோ தம் நாட்டில் ஒருவனுக்கு ஒருத்தி என்ற பண்பாடு இருப்பதால் பெண் கொடுக்க மறுத்து பரிசில்களை அனுப்பி விடுகின்றார். நம் தமிழகத்தில் ஒருவனுக்கு ஒருத்தி என்ற பண்பாடு இன்றளவும் தொடர்ந்து வருகின்றது. இவ்வரலாற்றுப் பதிவுகள் தலைமுறைகள் பல கடந்தாலும், தமிழரின் பண்பாட்டு எச்சங்கள் இன்றைய வாழ்க்கையிலும் பின் தொடர்வதை நம்மால் காண முடிகின்றது.

## அன்பு

அன்பு என்பது அனைத்து உயிர்களிடத்தும் நிலவும் ஒரு செயல். பகுத்தறிவுள்ள மனிதனுக்கு மட்டுமல்லாது, ஐந்தறிவு உயிர்களிடத்தும் உண்டு என்பதனை,

"...தேன் மயங்கு பாலினு மினிய அவர்நாட்டு
ஊவலைக் கூவற் கீழ
மானுண் டெஞ்சிய கலுழி நீரே"
(கபிலர் பாடல்)

உடன்போக்கு மேற்கொண்ட தலைவி ஒருத்தி தன் தாய் வீட்டிற்கு வருகின்றாள். தலைவி செல்வ குடும்பத்தில் பிறந்தவள். அவள் வீட்டின் நன்னீர் பாரியின் பறம்புச் சுனை நீர் போன்று இனிக்கும். அவள் சென்ற ஊரிலோ தண்ணீர் பஞ்சம் இதைக் கேள்வியுற்ற தோழியோ தான் நீர் அருந்தும் போதெல்லாம் தலைவியை நினைத்து வருந்துகின்றாள். தாய் வீட்டிற்கு வந்த தலைவியிடம் முதல் கேள்வியே நீரைப் பற்றி தான். உங்கள் ஊரில் நீர் பஞ்சமாமே என்று வினவினாள். அதற்குத் தலைவி நீ சொல்வது ஓரளவு உண்மைதான். தோழி அவர் நாட்டில் குட்டை குட்டையாக நீர் இருக்கும். அந்நீரைக் குடிக்க மான் குடும்பம் ஒன்று வந்தது குட்டையிலோ கொஞ்சம் தான் நீர் இருந்தது தந்தையும் தாயுமான மான்கள் தம் குட்டிகளை முதலில் குடிக்க விட்டது. குட்டிகளோ மேலோட்டமாக குடிக்காமல் சேற்றுடன் கலந்து குடித்தது. அதற்குப் பின் எஞ்சிய நீரோ குறைவு. குறைவான நீரைப் பார்த்த ஆண் மான் பெண் மானைக் குடிக்க பணித்தது. அந்த அன்புக் கட்டளைக்கு இணங்கிய பெண் மானோ நீர் குடிப்பது போல் நடித்தது. பின் எஞ்சிய நீரை ஆண் மான் குடித்தது. பெண் மான் மகிழ்ந்தது. இந்நிகழ்வை கபிலர் பாடல் மூலம் அறியலாம்.

## அறிவு

குலத்தால் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்று சொல்லக் கூடாது. அறிவினில் உயர்ந்தவரே உயர்ந்தவர் எனலாம்.

புறநானூறு பாடல்,

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலை முனியாது, கற்றல் நன்றே

பிறப்பு ஓர் அன்ன உடன் வயிற்றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயும் மனம் திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோருள்ளும்
மூத்தோன் வருக என்னாது அவருள்
அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே.”
(புறநானூறு:)

என்று பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன் பாடியதன் பொருள் தன் ஆசிரியனுக்கு துன்பம் வந்தவிடத்து உதவியும், வேண்டிய பொருள் கொடுத்தும் ஆசிரியரை வழிபடுவதற்கு வெறுப்படையாமல், ஒருவன் கல்வி கற்பது அவனுக்கு நன்மை தரும். அதற்கு என்ன காரணம் எனில், ஒரே தாயின் வயிற்றில் பிறந்திருப்பினும் சிறப்பின் காரணமாக தாயின் அன்பும் பாசத்தால் மனம் வேறுபாடு அடைவாள். ஒரே குடியில் பிறந்திருந்தாலும் மூத்தோன் வருக என்று அழைக்காது, அவர்களுள் அறிவுடையோனை வருக என்று அழைத்து, அவன் காட்டும் அறவழியிலே மன்னனும் நடப்பான். நான்கு வருணங்களில் கீழ் குடியில் பிறந்தவன் கற்றவனாக இருப்பின் அவனை உயர் குடியைச் சார்ந்தவனும் உயர்வாக மதித்துப் போற்றுவான். நாலடியார் பாடல் கூறும் கல்வியின் சிறப்பு பற்றிய பாடல்.

“குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலமையால்
கல்வி அழகே அழுகு”.
(நாலடியார் பொருட்பால், கல்வி: 1)

பெண்களுடைய கூந்தல் அழகும், இடையினது அழகும், மஞ்சள் பூசி குளிக்கும் அழகும் அழகல்ல. கற்பதனால் ஏற்படுகின்ற நடுவுநிலைமைத் தன்மை தான் ஒருவருக்கு அழகாகும் என்கிறது நாலடியார்.

ஒழுக்கம்

நாள்தோறும் ஒருவன் நடந்து கொள்கின்ற நடைமுறை தான் ஒழுக்கம் என்கிறோம். ஒழுகு என்ற சொல் மறைமுகமாக உணர்த்துகின்ற ஒரு செய்தி. ஒழுக்கத்தை ஒரே நாளில் நம்மால் கற்றுக் கொள்ள முடியாது. அது தினந்தோறும் பழக்கப்படுத்தப்படுவதால் தான் ஏற்படும். அதாவது, உள்ளம், உரை, செயல் மூன்றாலும் மற்றவர்களுக்கு தீமை தராமல் ஒழுகுதலே நல்லொழுக்கம் என்கிறோம். இப்பொழுது ஒழுக்கம் என்பதை நன்னடத்தை என்ற பொருளில் கையாண்டு வருகிறோம். ஒழுக்கத்தை தமிழர்கள் உயிரினும் மேலாகக் கருதுகின்றனர். இதனை திருவள்ளுவரும்,

“ஒழுக்கம் விழுப்பம் தரலாம் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்” (திருக்குறள்:)

ஒழுக்கத்தை பழந்தமிழர் போற்றி புகழ்ந்தனர். முதுமொழிக் காஞ்சியும் கடல் சூழ்ந்த உலகத்து மக்கட்கெல்லாம் கற்றலைவிடச் சிறந்தது ஒழுக்கம் என்று உரைக்கிறது. என்பதை இப்பாடல் வரிகளில் அறிய முடிகிறது.

ஆர்கலி யுலகத்து மக்கட்கெல்லாம்
ஓதலின் சிறந்தகு ஒழுக்கமுடைமை
(முதுமொழிக் காஞ்சி : சிறந்த பத்து:1)

அறம்

அறத்தால் வருவதே இன்பம் என்பதற்கிணங்க, தெரிவதைத் தெரிந்து கொண்டு பழி பாவங்களுக்கு அஞ்சி ஒழுக்கத்துடன் வாழும் வாழ்க்கையே அறவாழ்க்கை எனலாம். பண்டைத் தமிழ் மக்கள் இவ்வற வாழ்க்கையை வாழ்ந்து நமக்கு வழிகாட்டியாக உள்ளனர். திருவள்ளுவரும் இதை வலியுறுத்தும் விதமாக,

“அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல
(திருக்குறள் அறன் வலியுறுத்தல:40)

கூறுகிறார்.

## காதல்

சங்ககாலம் காதலையும் வீரத்தையும் இரு கண்களாக போற்றின. அன்பு என்பது ஆண், பெண் இருபாலர்க்கும் பொது. காதல் கொண்ட பெண் தலைவனை அவனுக்குத் தெரியாமல் பார்த்து ரசிப்பாள். ஆனால் தலைவன் பார்க்கும் போது எங்கோ பார்ப்பது போல் நிலத்தைப் பார்த்து நடிப்பாள். இந்நிகழ்வு தலைவி தலைவன் மேல் காதல் கொண்டுள்ளாள் என்பதை குறிப்பால் தலைவனுக்கு உணர்த்துவதாகும். இதனை திருவள்ளுவர்,

"யான் நோக்குங் காலை நிலன்நோக்கும்
நோக்காக்கால்
தான் நோக்கி மெல்ல நகும்"

இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். குறுந்தொகையில் தலைவி ஒருத்தி தலைவன் மேல் கொண்ட அன்பை விளக்கும் போது இத்தன்மையுடையது என்கிறாள்.

"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆர் அளவின்றே - சாரல்
கருங்கோள் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே"
(குறுந்தொகை: குறிஞ்சி.3)

தலைவி தலைவன் மேல் கொண்ட காதலை நோக்குங்கால், நிலத்தை விட அகலத்தால் பெரியது. எண்ணப்புகுங்கால், வானத்தை விட உயர்ச்சியில் மிக்கது. நினைக்க புகுங்கால், கடலை விட ஆழத்தால் அளவிட முடியாதது என்று உரைக்கின்றாள்.

## கற்பு

கற்பு என்பது பெண்களுக்கு மட்டுமே உரித்தானது என்ற கருத்துகள் தான் நிலவி வருகின்றன. ஆனால் பாரதியார் கற்பென்பதை இருவருக்கும் பொதுவில் வைப்போம் என்று நடுநிலையில் கூறியுள்ளார். தொல்காப்பியர் தன்னுடைய தொல்காப்பியத்தில் பொருளதிகாரக் கற்பியலில் கற்பு பற்றி விளக்கமாகக் கூறியுள்ளார். கற்பு என்பதை கற்பியலில் தொல்காப்பியர் திருமணத்திற்குப் பின் ஆணும் பெண்ணும் இணைந்து உறவு பூண்டு வாழும் வாழ்க்கை என்கிறார். திருமணத்திற்கு முன்பு வாழும் வாழ்க்கை களவு. பெண்ணைக் கொடுப்பதற்குரிய மரபினர் தலைவனுக்கு தலைவியை சடங்குகள் செய்து தருவது கற்பு என்கிறார் திருவள்ளுவர். மேலும், தலைவனுடன் தலைவி உடன்போக்கு மேற்கொள்ளும் போது கொடுப்பவர் இன்றியும் சடங்குகளுடன் கற்பு நிகழும். நான்கு வகையான வருணங்களில் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் சடங்குகளுடன் பெண்ணைக் கொடுப்பவர். சடங்கு பெற்றோரும் மற்றோரும் கலந்து செய்வார்கள். இதில் பொய்யும் குறையும் தோன்றிய பின்னர் ஐயர் இச்சடங்கை செய்து வைத்தார் என்று தொல்காப்பியம் குறிப்பிட்டுள்ளது.

"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொள்குறி மரபினர் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குறி மரபினோர் கொடுப்பக்
கொள் வதுவே"
(தொல்.பொருள்: 1)

இந்நூற்பா மூலம் தெரிந்து கொள்ளலாம்.

## வீரம்

புறநானூறு கூறும் வீரம் என்பது தன் உயிரைத் துச்சமாக நினைக்காமல் தன் நாட்டையும் தன் இனத்தையும் அதனைச் சார்ந்த வாழ்வியலையும் போற்றிப் பேணிக் காப்பது அறம் என்று கொண்டுள்ளனர். வீரன் ஒருவன் தாயிடம் உன் மகன் எங்குள்ளான் என்று வினவியதற்கு அந்தத் காவற்பெண்டு கூறும் பாடல் வரிகள்,

"சிற்றில் நல் தூண் பற்றி நின்மகன்
யாண்டு உளனோ? என வினவுதி என்மகன்
யாண்டு உளன் ஆயினும் அறியேன் ஓரும்..
..தோன்றுவன் மாதோ போர்களத்தானே
(புறநானூறு:86).

## மானம்

தமிழர்களின் மானப் பண்பு பார்போற்றும் பண்பு. திருவள்ளுவரும், "மயிர் நீப்பின் வாழார்

கவரிமான் அன்னார்" என்றும் "உயிர் நீப்பர் மானம் வரின்" என்றும் குறிப்பிட்டுள்ளார். சோழன் செங்கணானிடம் தோல்வியுற்று குடவாயில் கோட்டத்தில் சிறைப்பட்டான் சேரமான் கணைக்கால் இரும்பொறை. நீர் வேட்கையால் காவலாளியிடம் நீர் கேட்க. காலம் தாழ்த்தி தந்த நீரை உண்ணாது உயிர் நீத்த செயல் மானப் பண்பிற்குரியது. அப்பொழுது கணைக்கால் இரும்பொறை பாடிய பாடல் இது.

**"குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்**
**ஆள் அன்று என்று வாளின் தப்பார்**
தோடர் படு ஞமலியின் இடர்படுத்து இரீஇய
**கேள் அல் கேளிர் வேளாண் சிறுபதம்**
**மதுகை இன்றி வயிற்றுத் தீத் தணிய**
**தாம் இரந்து உண்ணும் அளவை**
**ஈன்மரோ இவ் உலகத்தானே?"**
**(புறநானூறு:74)**

மேலும், சேர பரம்பரையைச் சார்ந்த மற்றொரு மன்னன் பெருஞ்சேரலாதன், கரிகாலனை வெண்ணிப் பரந்தலையில் போர் செய்யும் போது வேல் ஒன்று மார்பில் பட்டு புறமாக சென்று விட்டது. அப்புறப் புண்ணுக்கு நாணி வடக்கிலிருந்து உயிர் துறந்தான் சேரன். மன்னன் எவ்வழியோ மக்கள் அவ்வழி என்பதற்கேற்ப மக்களும் மானமுடன் வாழ்ந்தனர்.

**"குன்றும் மலையும் பல பின் ஒழிய**
**வந்தனென் பரிசில் கொண்டனென்**
**செலற்கு என**
**நின்ற என் நயந்து அருளி ஈது கொண்டு**
**ஈங்ஙனம் செல்க தான் என என்னை**
**யாங்கு அறிந்தனோ தாங்கு அருங் காவலன்..**
**..தினை அனைத்து ஆயினும் இனிது-அவர்**
**துணை அளவு அறிந்து நல்கினர் விடினே"**

இவ்வரிகள் உணர்த்துவன, அதியமானிடம் தன் புலமையைக் காட்டி பரிசில் பெற சென்றார் பெருஞ்சித்திரனார். ஆனால் பரிசுப் பொருளை மன்னன் தராது இது கொண்டு செல்க என்று சேவகனிடம் கொடுத்தனுப்பியதை ஏற்காது, நான் பரிசில் பெறும் புலவன். நான் ஊதியத்தைக் கருதும் வணிகன் அல்ல என்று உரைக்கிறது.

## கொடை

சங்க இலக்கியங்கள் காலத்தைக் காட்டும் கண்ணாடி என்றால் அது மிகையல்ல. அதேபோல் புறநானூறும் மன்னனின் வீரம் பற்றியும் கொடைத் தன்மைப் பற்றியும் சுட்டுகிறது.

**"புறாவின் அல்லல் சொல்லிய கறையடி**
**யானை வான்மருப் பெறிந்த வெண்கடைக்**
**கோல் நிறை துலாஅம் புக்கோன் மருக"**
**(புறநானூறு:39)**

இப்பாடல் சிபி சக்கரவர்த்தியைப் பற்றியது. புறாவின் துன்பத்தைப் போக்க துலாக்கோளின் மீது ஏறி தன் தசையை தானமாக கொடுத்த சிபி மன்னனை பற்றி கூறுவதன் மூலம் கொடைத் தன்மைப் பற்றி தெரிந்து கொள்ளலாம்.

## விருந்தோம்பல்

பண்டைய தமிழர்கள் விருந்தோம்பலில் சிறந்து விளங்கினர். தலைவியின் சிறந்த கடமையாக விருந்தோம்பலைக் குறிப்பிடுகிறது தொல்காப்பியம்.

**"விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்**
**பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்"**
**(தொல் பொருள்: 11)**

ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்க்கை நடத்துவது இல்லறம். இவ்வாற கணவனும் மனைவியும் நடத்தும் இல்லறத்தில் கணவனின் உறவினர்களைப் போற்றிக் காப்பது மனைவியின் கடமை என்கிறார் தொல்காப்பியர். சங்ககால மக்கள் கணவன், மனைவி ஆகிய இருவரும் இணைந்து தருமங்கள் செய்தும், விருந்து போற்றியும், நோன்புகள் இருந்தும் வாழ்க்கையை சிறப்பாக நடத்தி உள்ளனர் என்பதை அறியலாம்.

ஜ